163—

நியாய விலைக் கடை

***455—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, எஸ். குருபட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சந்தனப்பள்ளி ஊராட்சி, எஸ். குருபட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட எஸ். குருபட்டி கிராமத்தில் 192 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கிராம மக்கள், ரேஷன் பொருள்களைப் பெற வேண்டுமென்றால், 3 கிலோ மீட்டர் தூரம் மலைப் பாதையிலே நடந்து சென்று, யானை வழித்தடத்திலே போக வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தக் கிராமத்திற்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

இன்றைக்கு ஒரு தாய்க் கடையிலிருந்து 2 பகுதிநேர நியாய விலைக் கடைகள்தான் திறக்க முடியும் என்று அரசு அதிகாரிகள்

2012 ஏப்ரல் 25]

சொல்கிறார்கள். இத்தகைய மலைக் கிராமங்களுக்கு அந்த அரசாணையைத் தளர்த்தி, இரண்டுக்கும் மேற்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதி, சந்தனப்பள்ளி ஊராட்சி, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்கீழ் செயல்படுகின்ற சந்தனப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடை 640 குடும்ப அட்டைகளோடு இயங்கி வருகிறது. எஸ். குருபட்டியில் 200 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 200 குடும்ப அட்டைகளைத் தனியாகப் பிரித்து, அதற்கு ஒரு நியாய விலைக் கடை—பகுதிநேர அங்காடி அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. விரைவிலே அந்தப் பகுதிநேர நியாய விலைக் கடை அமையும் என்பதனை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரண்டு பகுதிநேரக் கடைகளுக்கு மேலே பிரிக்க முடியுமா என்கின்ற கேள்வியினை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இந்தக் கேள்விக்கு இந்த அவையிலே 2, 3 முறை பதில் சொல்லியாகிவிட்டது. அதனடிப்படையில், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆலோசனையின் பேரில் கையேடு ஒன்றும் வழங்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கையேடு மானியக் கோரிக்கை எடுத்துக்கொண்ட அன்று எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுத்தாகிவிட்டது. எனவே, மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஆல்ஹள்ளி, புல்ஹள்ளி, பெட்டமகம் போன்ற மலைக் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் 20, 30, 40 குடும்ப அட்டைகள் என இருக்கின்றன. அந்த மக்கள் ரேஷன் பொருள்களைப் பெற வேண்டுமென்றால், 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து பொருள்களைப் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, அத்தகைய மலைக் கிராமங்களுக்கு* Mobile Distribution *மூலமாக ரேஷன் பொருள்களை வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.*

திரு. கே.பி. நாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே, ஒலக்கூர் ஒன்றியத்திலே, செம்பாக்கம் பஞ்சாயத்து 1,000 குடும்ப அட்டைகளுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு மதுரா கிராமம், மேட்டூர் கிராமத்திலே 290 குடும்ப அட்டைகள் உள்ளன. 6 மாத காலமாக ஆவணங்களெல்லாம் சரி செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுக்கப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் கடைகள் இன்னும் திறக்கப்படவில்லை. அதே ஒலக்கூர் ஒன்றியத்திலே வடம்பூண்டி, மதுரா கிராமம், விநாயகபுரம் பகுதியில் 250 குடும்ப அட்டைகளுடன் தாய்க் கடை இயங்கிக் கொண்டிருக்கின்றது. விநாயகபுரம் கிராமத்தில் 237 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இதற்கும் ஆவணங்கள் சரி செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு வேடிக்கை என்னவென்றால், இதற்கு முன் ஆண்டு*

கொண்டிருந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசிலே, அங்கே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கடைகள் கட்டப்பட்டுள்ளன. கட்டப்பட்டு, 5 ஆண்டுகாலமாகப் பூட்டப்பட்டுள்ளன. அதனை உடனடியாகத் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதிக்குட்பட்ட செம்பாக்கம் முழுநேரக் கடையிலிருந்து 290 குடும்ப அட்டைகளைக் கொண்ட பகுதிநேர அங்காடியைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கருத்துரு பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, அந்தப் பகுதியில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே கட்டப்பட்ட கட்டடங்களெல்லாம் திறக்கப்படாமல் இருக்கின்றன என்கின்ற செய்தியையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே இதுபற்றிய விவரங்களை நேரில் கேட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நியாய விலைக் கடைகளுக்குச் செல்லும்போது, அங்கு இருக்கக்கூடிய பொருட்களுக்கு பூச்சிகளினால் தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்பதையெல்லாம் பல்வேறு இடங்களிலே கூறினார்கள். எனவே, தற்பொழுது இருக்கக்கூடிய கடைகளில் ஒருங்கிணைந்த பூச்சி ஒழிப்புத் திட்டத்தின்மூலமாக பூச்சி மருந்து அடித்து கரப்பான், பல்லி போன்றவை இல்லாமல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2012 ஏப்ரல் 25

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களில் பூச்சி, புழுக்களெல்லாம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலேதான்— (குறுக்கீடு) பூச்சி, புழுக்களோடு கடந்த கால ஆட்சியிலேதான் மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அதைப்போல எந்த இடத்தில் இருக்கிறதென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது அதுமாதிரி எந்தக் கடைகளிலும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. அப்படித் தெரிந்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

திரு. ப. பார்த்தசாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில் 127—வது வட்டம், திருவீதியம்மன் கோயில் தெருவில் 300—க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. அவர்கள் 100 அடி சாலையைக் கடந்து கோயம்பேட்டில் உள்ள நியாய விலைக் கடைக்குச் செல்ல சிரமமாக உள்ளது. அவர்களின் சிரமத்தைப் போக்க திருவீதியம்மன் கோயில் தெருவில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு செயல்படுகிற ஆட்சி என்பது இங்கே அவையில் உள்ள அத்தனை*

2012 ஏப்ரல் 25]

உறுப்பினர்களுக்கும் தெரியும். அதனடிப்படையில் 100 அடி சாலையைக் கடந்து சென்று பொதுமக்கள் பொருட்களை வாங்குகிற சூழ்நிலை இருந்தால், அதனை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயிருந்து கருத்துருவைக் கேட்டு, அதற்குரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

164—

கிரானைட் தொழிற்சாலை

***6423—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசலில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் TAMIN *நிறுவனத்திற்குச் சொந்தமான கிரானைட் கற்கள் உற்பத்தி செய்யும் சுரங்கம் ஏதும் இல்லை. சுரங்கக் குத்தகை பெற்று கற்கள் உற்பத்தி செய்யும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதிய கிரானைட் தொழிற்சாலை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ் கோட்டையாம், புதுக்கோட்டை*